Rubber Factory under Western Ghats Development Scheme.

*Q.—No. 65 Thiru J. JAMES, Thiru A. SWAMIDHAS, Thiru C. KRISHNAN : Will the Hon. the Minister for Information and Religious Endowments be pleased to state :

(a) whether there is a proposal for starting a rubber factory under the Western Ghats Schemes in Kanyakumari district ;

(*b*) the investment proposal for this scheme ;

(*c*) whether the Central Government has any share in this scheme ; and

(*d*) the employment scope of this scheme ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : (அ) கன்னியாகுமரி மாவட்டத்தில் மேற்குத் தொடர்ச்சி மலை அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் ரப்பர் தொழிற்சாலை அமைக்கும் திட்டம் எதுமில்லை. எனினும் ஐந்தாண்டுத் திட்டத்தின் கீழ் (1) அரசு ரப்பர் தோட்டத்தின் மேற்குப் பகுதியிலுள்ள ஐந்து ரப்பர் தோட்டங்களுக்காக மைலார் பகுதியில் ஒரு கிரம்ப் ரப்பர் தயாரிக்கும் தொழிற்சாலையும் (2) பெருஞ்சாணி பகுதியில் ஒரு ஷீட் ரப்பர் தொழிற்சாலையும் நிறுவத் திட்டமிடப்பட்டு அதற்கான எற்பாடுகள் நடைபெற்று வருகின்றன.

(ஆ) இந்த இரு திட்டங்களின் மதிப்பீடு முறையே ரூ. 35.00 இலட்சமும், ரூ. 21.00 இலட்சமும் ஆகும்.

(இ) இத்திட்டத்தில் மத்திய அரசின் பங்கு எதுமில்லை.

(ஈ) இத் தொழிற்சாலைகளின் மூலம் மொத்தம் சுமார் 150 தொழிலாளர்கள் வேலை வாய்ப்புப் பெறுவர்.

திரு. செ. கிருஷ்ணன் : தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்தில் ரப்பர் தயாரிக்கும் தொழிற்சாலைகள் இரண்டு இடங்களில் எற்படுத்துவதற்கு முயற்சி எடுத்துக்கொண்ட மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.